இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 277 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 05 – செவ்வாய்க்கிழமை 19 மே 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 277 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 05 - Tuesday 19 May 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## உச்சநீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 38 ஆக உயர்வு!

### குடியரசுத் தலைவர் ஒப்புதல்!



புது டெல்லி, மே 19–

உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 34–ல் இருந்து 38 ஆக உயர்த்த குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார் என ஒன்றிய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை தற்போது தலைமை நீதிபதியை சேர்த்து 34 ஆக உள்ளது. இதனை 38 ஆக உயர்த்துவதற்கு பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவை குழு சமீபத்தில் முடிவு செய்து, அதை முன்மொழிந்தது. இதற்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தற்போது ஒப்புதல் அளித்துள்ளார். இதனை ஒன்றிய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால்–ம் நேற்று முன்தினம் (மே 17) உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தளப்பக்கத்தில் கூறியிருப்பதாவது, ”1956 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை சட்டம், 2026–ல் திருத்தப்பட்டு நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசர திருத்த சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் முர்மு ஒப்புதல் அளித்துள்ளார். ஆகையால், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 33 இல் (தலைமை நீதிபதி அல்லாமல்) இருந்து 37 ஆக உயர உள்ளது என தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மே 5, 2026 அன்று ஒன்றிய அமைச்சரவை கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை, தலைமை நீதிபதியைச் சேர்க்காமல் 33–ல் இருந்து 37 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

அதாவது, கூடுதலாக 4 புதிய நீதிபதிகளை நியமிக்க திட்டமிடப்பட்டது. இதை முன்னிட்டு 1956 ஆம் ஆண்டின் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை சட்டத்தை திருத்தி, 2026 திருத்த அவசர சட்டம் நாடாளுமன்ற கூட்டத்தில் முன்மொழியப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் அதிகரித்து வரும் பணிச்சுமை மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை முன்வைத்து இந்த திருத்த அவசரச் சட்டம் முன்மொழியப்பட்டது. இதற்கே தற்போது குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

நீதிபதிகளின் எண்ணிக்கையை பலப்படுத்துவதன் மூலம், வழக்குகளைத் தீர்த்து வைக்கும் செயல்திறன் மேம்படும் என்றும், விசாரணைகளில் ஏற்படும் தாமதங்கள் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## நீட் தேர்வு வினாத்தாள் மோசடி!

# தேசிய தேர்வு முகமைக்கு நேரடித் தொடர்பு!

## சி.பி.ஐ. விசாரணையில் உறுதி!

புதுடெல்லி, மே 19 -

**நீட் கேள்வித்தாள் மோசடியில் தேசிய தேர்வு முகமைக்கு நேரடித் தொடர்பு இருப்பது சி.பி.ஐ. விசாரணை மூலம் உறுதியாகி யுள்ளது.**

**இதையடுத்து, கேள்வித் தாள் தயாரிப்பு குழுவை கலைத்து ஒன்றிய அரசு உத்தர விட்டுள்ளது.**

நீட் மோசடி குறித்து சி.பி.ஐ. நடத்தி வரும் விசாரணையில் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில், வேதியியல், இயற்பியல் கேள்விகள் ஓய்வு பெற்ற ஆசிரியர் குல்கர்னி மூலமாகவும், உயிரியல் கேள்விகள் ஆசிரியை மனிஷா குல்கர்னி மூலமாகவும் கசிந்தது உறுதியாகி உள்ளது.

குல்கர்னி, மகாராஷ்டிரா மாநிலம் லத்தூர் ஜூனியர் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது நீட் பயிற்சி வகுப்புகளை நடத்தி வந்துள்ளார். இவர் பணியாற்றிய பள்ளியிலும் நீட் வகுப்புகள் நடந்து வருகிறது.

மனிஷா குல்கர்னி பூனாவில் உள்ள மாடர்ன் கலை, அறிவியல் கல்லூரியில் பணியாற்றி வருகிறார். 7 மாதத்தில் ஓய்வு பெற உள்ள இவரும் நீட் வகுப்புகளை நடத்தி வந்துள்ளார்.

கடந்த 6 ஆண்டுகளாக நீட் கேள்வி தயாரிப்புக் குழுவில் இவர் இடம்பெற்றுள்ளார். மிக முக்கியமான தேர்வை நடத்தும் குழுவில் ஓய்வு பெற்ற ஆசிரியர் எப்படி இடம் பெற்றார்? இவர்கள் எப்படி தனியாக பயிற்சி வகுப்புகளை நடத்த அனுமதிக்கப்பட்டார்கள்? என, கல்வியாளர்கள், மருத்துவர் சங்கங்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

உரிய கண்காணிப்பை மேற்கொள்ளாதது ஏன்? தனியார் பள்ளி ஆசிரியர்களை கேள்வித்தாள் தயாரிக்க தேசிய தேர்வு முகமை எப்படி அனுமதித்தது? என்ற கேள்விகளையும் அவர்கள் எழுப்பியுள்ளனர். தற்போது கேள்வித் தாள் தயாரிப்புக் குழுவில் உள்ள அனைவரையும், விசாரிக்க சி.பி.ஐ. முடிவு செய்துள்ளது. கேள்விகளை மொழி பெயர்த்தவர்களையும் விசாரிக்க முடிவு செய்துள்ளனர்.

நீட் கேள்வித்தாள், தேர்வுக் குழு மூலம் கசிந்ததை தொடர்ந்து கேள்வி தாள் தயாரிப்புக் குழு முழுமையாக கலைக்கப்பட்டுள்ளது. இதனிடையே, தேசிய தேர்வு முகமைக்கு இரண்டு புதிய இணை இயக்குனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இரு வரும் ஓய்வு பெற்ற வருவாய்த் துறை அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஐக்கிய டாக்டர்கள் முன்னணி என்ற அமைப்பின் தலைவர் டாக்டர் லக்ஷய மிட்டல் என்பவர் சார்பிலும், உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பாக பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

கோடிக்கணக்கான மாணவர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் ஒரு முதன்மை தேர்வு முகமை, 1860ம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ், தன்னாட்சி பெற்ற ஒரு தன்னார்வு தொண்டு நிறுவனம் போன்ற கட்டமைப்பில் இயங்குவது அநீதியானது.

மருத்துவ நுழைவுத் தேர்வில் தொடரும் முறைகேடுகள், இந்திய அரசியலமைப்பு சட்டம் வழங்கிய, சமத்துவ உரிமை மற்றும் வாழ்வாதாரத்திற்கான உரிமை ஆகியவற்றை நேரடியாக பறிப்பது போல உள்ளது.

நடப்பாண்டு நீட் நுழைவுத் தேர்வின் போது, வினாத்தாள் கசிந்ததால், 23 லட்சம் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. கோடிக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புகூறல் இல்லாத, ஒரு சங்கப் பதிவு மாதிரியின் கீழ் இயங்கும் அமைப்பு மூலம், தேர்வை தொடர்ந்து நடத்த அனுமதிக்கக் கூடாது.

எனவே, தேசிய தேர்வு முகமையை உடனடியாக கலைத்துவிட்டு, பார்லி.,யின் நேரடி கண்காணிப்பில் இயங்கும் புதிய சட்டப்பூர்வ அந்தஸ்து கொண்ட தேசிய தேர்வு வாரியத்தை உருவாக்க வேண்டும். இதற்காக பார்லி.,யில் மசோதாவை அறிமுகப்படுத்த மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

புதிய அமைப்பானது சி.ஏ.ஜி., எனப்படும் மத்திய கணக்கு தணிக்கையாளரின், தணிக்கைக்கு உட்பட்டதாகவும், பலத்த சைபர் பாதுகாப்பு மற்றும் வினாத்தாள் கசிவு தடுப்பு பிரிவுகளை கொண்டதாகவும் இயங்க வேண்டும்.

எதிர்காலத்தில் நடக்கும் தேசிய அளவிலான தேர்வுகள் தங்கு தடையின்றி நூறு சதவீதம் நேர்மையாக நடப்பதை உறுதி செய்ய வேண்டும். இதற்காக உச்சநீதிமன்ற கண்காணிப்பின் கீழ் தற்காலிக குழுவை அமைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெட்ரோல் – டீசல் விலை மீண்டும் உயர்வு! பொதுமக்கள் அதிர்ச்சி!

சென்னை, மே 19 -

பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு மேலும் 10 காசுகள் உயர்த்தப்பட்டிருப்பதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

ஈரான் போர் எதிரொலியாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் உயர்த்தின.

கச்சா எண்ணெய் விலை குறைவாக இருந்தபோது பெட்ரோல், டீசல் விலையை குறைக்காமல் பல லட்சம் கோடி ரூபாய் கொள்ளை லாபம் ஈட்டிய எண்ணெய் நிறுவனங்கள், தற்போது எரி பொருள் தட்டுப்பாட்டை காரணம் காட்டி, விலையை உயர்த்தியதற்கு நாடு முழுவதும் அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தச் சூழலில், பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு மேலும் 10 காசுகள் உயர்த்தப்பட்டிருப்பதால் பொதுமக்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

புதிய விலையின்படி சென்னையில் பெட்ரோல் லிட்டருக்கு103 ரூபாய் 77 காசுகளுக்கும் டீசல் விலை லிட்டருக்கு 95 ரூபாய் 35 காசுகளுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

## 40 ஆண்டு கால நட்பின் அடிப்படையில்

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்தேன் !

## சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பேட்டி!

சென்னை, மே 19 -

**தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை தான் சந்தித்தது ஏன்? என்பது குறித்து சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் விளக்கமாக விவரித்துள்ளார்.**

சென்னை போயஸ் கார்டனில் செய்தியாளர்களை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் நேற்று முன்தினம் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

“தேர்தல் முடிவுகள் வந்த பிறகு என்னைப் பற்றி சில விமர்சனங்கள் எழுந்தன. அது தொடர்பாக ஊடகத்தினரை சந்தித்து விளக்கம் தர வேண்டும் என கருதினேன். அதற்காக உங்கள் எல்லோரையும் இப்போது சந்தித்துள்ளேன்.

தேர்தல் முடிவுகள் வந்தவுடன் நான் ஸ்டாலின் சாரை சந்தித்தேன். அது கொஞ்சம் விமர்சனத்துக்கு உள்ளானது. ஸ்டாலின் சாருக்கும் எனக்கும் இடையிலான நட்பு அரசியலுக்கு அப்பாற்பட்டது. அவர் எனது நீண்ட கால நண்பர். ஜனநாயகத்தில் வெற்றி தோல்வி என்பது சகஜம். இருந்தாலும் கொளத்தூர் தொகுதியில் ஸ்டாலின் அவர்கள் தோல்வி அடைந்தது எனக்கு சங்கடமாக இருந்தது. அதனால் நண்பர் என்ற முறையில் அவரைச் சென்று பார்த்தேன்.

விஜய் முதல்வர் ஆகக்கூடாது, அதிகாரத்துக்கு வரக்கூடாது, அதை தடுக்கவே நான் அங்கு சென்றுள்ளேன் என்றும், இரண்டு பெரிய கட்சிகள் இணைய வேண்டும் என பேசப்பட்டதாக சொல்லப்பட்டது. அந்தச் சூழலில் அதெல்லாம் பேச முடியாது. அப்படி தரம் தாழ்ந்து பேசக் கூடிய நபர் ரஜினிகாந்த் அல்ல.

### நான் அரசியலில் இல்லை!

இரண்டாவதாக நான் அவருக்கு (விஜய்) வாழ்த்து தெரிவிக்கவில்லை என விமர்சனங்கள் எழுந்தன. அவர் வென்றதும் எக்ஸ் தளத்தில் என்னுடைய வாழ்த்துகளை பதிவு மூலம் தெரிவித்தேன்.



விமான நிலையத்துக்கு செல்லும் போது ஊடகத்தினரை நான் சந்திப்பது வழக்கம். அண்மையில் விமான நிலையத்தில் ஒரு நபர் கையில் போனுடன் வந்து, ‘விஜய் முதல்வர் ஆகியுள்ளார்’ என சொன்னார். நான் அந்த நபரை பார்த்து சிரித்தபடி சென்று விட்டேன். அதை வைத்து நான் விஜய்க்கு வாழ்த்து தெரிவிக்கவில்லை என்ற விமர்சனம் எழுந்தது. மேலும், எனக்கு விஜய் மீது பொறாமை என்று சொல்லப்பட்டது.

### எனக்கு என்ன பொறாமை!

நான் அரசியலில் இல்லை. அப்படி இல்லாத சூழலில் அவர் மீது எனக்கு ஏன் பொறாமை வரப்போகிறது. ஒருவேளை கமல்ஹாசன் முதல்வர் ஆகியிருந்தால் எனக்கு அந்த பொறாமை வந்திருக்குமா என்று கூட தெரியாது. அப்போதும் எனக்கு பொறாமை வந்திருக்காது.

எனக்கும் விஜய்க்கும் இடையே ஒரு தலைமுறை இடைவெளி உள்ளது. நான் விஜய்க்கும், விஜய் எனக்கும் போட்டியிடுவது அது எங்களுக்கு நல்லது இல்லை என சொல்லி உள்ளேன். சிறு வயதில் இருந்து அவரைப் பார்த்து வருகிறேன். அவர் முதல்வர் ஆவதில் எனக்கு என்ன பொறாமை?

அவர் இளம் வயதில் முதல்வர் ஆகியுள்ளார். எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். செய்த சாதனைகளை விட அவரது சாதனை பெரியது. அது எனக்கு ஆச்சரியம் தந்தது. தனியொருவராக பெரிய கட்சிகளுக்கு எதிராக வெற்றி பெற்றுள்ளார். சினிமாத்துறையில் இருந்து அவர் வந்துள்ளார். அது எனக்கு ஆச்சரியம் தான் அளிக்கிறது.

விஜய் மீது மிகுந்த எதிர்பார்ப்புடன் மக்கள் வாக்களித்துள்ளனர். அந்த எதிர்பார்ப்பை நிச்சயம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உண்டு. அதற்கு எனது வாழ்த்துகள்.

நான் ஏன் அரசியலுக்கு வரவில்லை என்று விவரத்தை விரிவான அறிக்கையாக வெளியிட்டுள்ளேன். எனது ரசிகர்கள் தங்களுக்கு விருப்பமான அரசியல் கட்சிகளில் இணைந்து பயணிக்கலாம் என நான் ஏற்கெனவே சொல்லி உள்ளேன். திரைத்துறையில் இழப்பு என்பது தயாரிப்பாளரை மட்டுமே பாதிக்கும். ஆனால், அரசியல் அப்படி அல்ல. அதன் பொறுப்பு மிகப்பெரியது.

கமல் உட்பட சினிமாத்துறையைச் சேர்ந்த பிரபலங்கள் அவரை (விஜய்) சந்தித்துள்ளனர். நான் சம்பிரதாயத்துக்காக சென்று சந்திப்பவன் அல்ல. அவர் மீதான எதிர்பார்ப்பு நிச்சயம் நிறைவேற்றுவார் என எனக்கு நம்பிக்கை உண்டு. அவருக்கு இரண்டு ஆண்டுகளாவது அவகாசம் கொடுக்க வேண்டும். அவரது தொண்டர்கள் மிகக் கவனமாக செயல்பட வேண்டும். ஏனெனில், அவர்கள் செய்யும் தவறு விஜய்யை தான் பாதிக்கும்.

அறுபது ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சினிமா புகழ், இளைஞர்கள், மகளிர் கொண்டு வந்துள்ள மாற்றம் இது.

இவ்வாறு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பேட்டியளித்தார்.

## வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி:

# தென்மேற்கு பருவமழை முன் கூட்டியே துவங்கியது!

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, மே 18 –

தென்மேற்கு பருவமழை முன் கூட்டியே துவங்கியுள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியிருப்பதாவது: –

தென்மேற்கு பருவமழை தென் கிழக்கு அரபிக்கடல் பகுதிகளிலும், தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு வங்கக்கடலின் சில பகுதிகளிலும், அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் நிகோபார் தீவுகளிலும், ஸ்ரீ விஜயபுரம் உள்பட அந்தமான் தீவுகளின் சில பகுதிகளிலும் நேற்று முன்தினம் துவங்கியது. தென்மேற்கு பருவமழை கேரள பகுதிகளில் வரும் 26ம் தேதி துவங்கக்கூடும்.

நேற்று முன்தினம் தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று காலை 8.30 மணியளவில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக அதே பகுதிகளில் நிலவுகிறது. இதனால் தேனி, திண்டுக்கல், மதுரை கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக் கூடும்.

தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். நாளை தேனி, திண்டுக்கல், மதுரை கோயம்புத்தூர், நீலகிரி, சிவகங்கை, கரூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

19ம் தேதி திண்டுக்கல், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக் கூடும். தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். 20ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். 21 மற்றும் 22ம் தேதி தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று முதல் 20ம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட ஓரிரு 24 செல்சியஸ் வரை குறையக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 3536 செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2829 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இவ்வாறு வானிலை மையம் அறிவித்துள்ளது.

